1972 ஆகஸ்ட் 18]

* 29 Q.—THIRU G. SWAMINATHAN AND THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there has been any decrease in the sale of raffle tickets after the suspension of prohibition in the State; and

(b) if so, the percentage of decline?

திரு. ஜி. சுவாமிநாதன் :
திரு. வ. ஈஸ்வரமூர்த்தி } மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் மதுவிலக்கு செயல்படுவதை நிறுத்தி வைத்த பிறகு பரிசுச் சீட்டு விற்பனை குறைந்துள்ளதா?

(இ) ஆமெனில், விற்பனை எந்த சதவீதத்தில் குறைந்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். 1970 செப்டம்பரிலிருந்து 1971 பிப்ரவரி வரையிலும் கூட விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

(இ) விற்பனையில் ஏற்பட்ட சரிவின் சதவீதம் 7.7 ஆகும்.

* 30 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the sale of raffle tickets of other States has been banned within our State; and

(b) if so, the reasons therefor?

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற மாநில அரசுகளின் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்திற்குள் விற்கப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் போட்டியைத் தவிர்க்கவும் அப்பரிசுச் சீட்டுகள் நமது மாநிலத்தில் வந்து குவிவதைத் தடுக்கவும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. 23-12-71-ம் நாளிட்ட நிதித்துறையின் (பரிசுச் சீட்டுகள் பிரிவில்) வெளியான அரசு ஆணை 1800-ல் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதற்கு 1-1-72 முதற்கொண்டு தடை விதிக்கப்படுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை எதிர்த்து, திரு. எச். கவுதம் சந்த் ஜெயின் என்பவரால் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அதன் மூலம் 1-1-72 முதற்கொண்டு பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதைத் தடை செய்யும் அரசு ஆணை செயல்படுவது உயர்நீதி மன்றத்தில் விசாரணையிலுள்ள ரிட் மனுவின் மீது முடிவெடுக்கப்படுகிற வரையில் நிறுத்தி வைக்கப் படவேண்டும் என்று உயர்நீதி மன்றம் ஆணையிட்டு உள்ளது.

THIRU A. R. DAMODARAN: Is there any proposal to create a separate fund for the raffle proceeds and to earmark it for medical relief or educational purposes, Sir?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே இந்தப் பரிசுச் சீட்டின்மீது கிடைக்கிற நிதித் தொகை, இது போன்ற பொதுநலக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டு மென்கிற அளவிலேதான் தீர்மானிக்கப்பட்டு, வரையறுக்கப் பட்டுள்ளது.

Zonal Conference of Education Ministers.

* 31 *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Zonal Conference of Education Ministers was held in Madras during September 1971;

(*b*) if so, the details of the subjects discussed; and

(*c*) the stand taken by the Tamil Nadu Government at this Conference?